

தலைமைச் செயலகத்தில், நேற்று முன்தினம் (6.10.2025) வேளாண்மை – உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம் தலைமையில், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண் கல்லூரிகளில், இந்திய வேளாண்மை ஆராய்ச்சி கழகத்தால் நிரப்பப்படும் இளங்கலை சேர்க்கை முறை குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வேளாண்உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர்வ. தட்சிணா மூர்த்தி, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் பி.குமரவேல் பாண்டியன், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக கழக பதிவாளர் / துணை வேந்தர் (பொறுப்பு) முனைவர் சு.தமிழ்வேந்தன், வேளாண் தமிழ்நாடு பல்கலைக் கழக முதல்வர் திருபழனிச்சாமி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின்

# கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை குறித்த ஆய்வுக் கூட்டம்!

## அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தலைமையில் நடைபெற்றது!

சென்னை, அக். 8 -

வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம். ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் உறுப்பு மற்றும் இணைப்புக் கல்லூரிகளில் இளங்கலை வேளாண் மற்றும் பட்டயப்படிப்பு இடங்களில் மாணவர் சேர்க்கை குறித்த ஆய்வுக்கூட்டம் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக அலுவலர்களுடன் நேற்று முன்தினம் (06.10.2025 ) தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் கீழ் 18 உறுப்புக் கல்லூரிகள், 28 இணைப்புக் கல்லூரிகள் (தனியார்) என மொத்தம் 46 வேளாண் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. இக்கல்லூரிகளில், 14 இளங்கலை வேளாண் பட்டப்படிப்பிற்கான 5,250 இடங்களுக்கு, மேல்நிலை இரண்டாம் ஆண்டு தேர்ச்சி பெற்ற மாணவர்கள், அவர்கள் பெற்ற மதிப்பெண்களின் தரவரிசைப்படி சேர்க்கை நடைபெறுகிறது. மாணவர்கள் சேர்க்கைக்கு பொது நுழைவுத் தேர்வு ஏதும் நடத்தப்படுவதில்லை.

நடப்பாண்டில், அனுமதிக்கப்பட்ட 5,250 மாணவர் சேர்க்கை இடங்களில் இது வரை 4,274 இடங்கள் நிரப்பப்பட்டு 12.09.2025 முதல் வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. இதில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் 18 உறுப்புக் கல்லூரிகளில் அனுமதிக்கப்பட்ட 2,516 மாணவர் சேர்க்கை இடங்களில் 2,441 இடங்கள் (97 சதவீதம்) நிரப்பப்பட்டுள்ளன. இந்த மாணவர் சேர்க்கை அனைத்தும் மேல்நிலை பொதுத்தேர்வு மதிப்பெண் தரவரிசைப்படி மட்டுமே நிரப்பப்பட்டுள்ளன.

இந்நிலையில், ஒன்றிய வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் இந்தியாவில் உள்ள அனைத்து மாநில வேளாண் பல்கலைக்கழகங்களிலும் 20 சதவீதம் இளங்கலை பட்டப்படிப்பிற்கான இடங்கள் இனி பொது பல்கலைக்கழக நுழைவு தேர்வு (CUET) மூலம் இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகம் (ICAR) நிரப்பும் என அறிக்கை வெளியிட்டியிருப்பது குறித்து, வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக அலுவலர்களுட னான ஆய்வுக்கூட்டம், தலைமைச் செயலக வேளாண்மை உழவர் நலத்துறை கூட்ட அரங்கில் நேற்று முன்தினம் (06.10.2025) நடைபெற்றது.

இந்த ஆய்வுக்கூட்டத்தில், 1983-ஆம் ஆண்டிலிருந்து இந்தியாவில் உள்ள அனைத்து மாநில வேளாண் பல்கலைக் கழகங்களும் (STATE AGRICULTURAL UNIVERSITIES) தங்களுக்கு அனுமதிக்கப்பட்ட மாணவர் எண்ணிக்கையில் ஒரு குறிப்பிட்ட சதவீதத்தை கூடுதல் சேர்க்கை இடங்களாக (SUPER NUMERARY SEATS) புதுதில்லியில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகத்திற்கு ஒப்படைப்பு செய்து வருகின்றன.

இவ்வாறு ஒப்படைப்பு செய்யப்படும் இடங்களின் சதவீதம் அவ்வப்போது இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகத்தால் நிர்ணயம் செய்யப்படுகிறது. ஆரம்ப காலத்தில் 10 சதவீதமாக இருந்த இந்த ஒதுக்கீடு, 2022-23ஆம் கல்வியாண்டு வரை 15 சதவீதமாகவும், 2023-24 ஆம் கல்வியாண்டிலிருந்து 20 சதவீதமாகவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இந்த இடங்களுக்கு, தேசிய தேர்வு நிறுவனம் (NTA) மூலம் பொதுப் பல்கலைக்கழக நுழைவுத் தேர்வு நடத்தப்பட்டு, இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகத்தால் நிரப்பப்படுகின்றன.

இதன்படி, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்கப்பட்ட மாணவர் சேர்க்கை எண்ணிக்கையில் 20 சதவீதம், 2023-24-ஆம் ஆண்டிலிருந்து இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகத்திற்கு கூடுதல் சேர்க்கை இடங்கள் (SUPER NUMERARY SEATS) ஒதுக்கீட்டாக ஒப்படைக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் 18 உறுப்புக்கல்லூரிகளில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சிக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட கல்லூரிகளில் அனுமதிக்கப்பட்ட சேர்க்கை இடங்களில் , 7.5 சதவீத அரசு பள்ளி மாணவர்களுக்கான ஒதுக்கீடு, 5 சதவீத மாற்றுத்திறனாளிகள் ஒதுக்கீடு, 5 சதவீத தொழில் முறைக்கல்வி (VOCATIONAL) & விளையாட்டு ஒதுக்கீடு மற்றும் முன்னாள் இராணுவத்தினர் ஒதுக்கீடு நீங்கலாக மீதமுள்ள 1,361 இடங்களுக்கு 20 சதவீதம் என்ற அடிப்படையில் 272 மாணவர் சேர்க்கை இடங்கள் கூடுதலாக அகில இந்திய அளவில் நிரப்புவதற்கு இந்திய வேளாண் ஆராய்ச்சிக்கழகத்திற்கு (ICAR) ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளன.

இந்திய வேளாண் ஆராய்ச்சிக்கழகத்தின் (ICAR) இந்த 20 சதவீத இட ஒதுக்கீட்டினால், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் ஏற்கனவே மேல்நிலை பொதுத்தேர்வு மதிப்பெண் அடிப்படையில் கடைப்பிடித்துவரும் மாணவர்களின் சேர்க்கை எவ்விதத்திலும் பாதிக்கப்படாது. இந்த 20 சதவீத இடங்களுக்கும் தமிழ்நாடு மாணவர்களும் போட்டித்தேர்வு எழுதி சேர இயலும். மேலும், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் மற்றும் தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்திலும் இவ்வாறான ஒதுக்கீடு முறை நடைமுறையில் உள்ளது.

எனவே, ஒன்றிய வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் அறிவித்துள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சிக்கழகத்தின் (ICAR) 20 சதவீத ஒதுக்கீடுக்கு மட்டுமே அகில இந்திய அளவில் பொதுத்தேர்வு நடத்தப்பட்டு மாணவர்கள் சேர்க்கை நடைபெறுகிறது என்றும், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தால் ஆண்டு தோறும் மேல்நிலை பொதுத் தேர்வு மதிப்பெண் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுவரும் 5,250 இடங்களுக்கான மாணவர் சேர்க்கை தற்போது உள்ளபடி மதிப்பெண் தரவரிசையின்படியே நடைபெறும்.

நடப்பாண்டில், இளங்கலை வேளாண் கல்வியில் மாணவர் சேர்க்கைக்கான உரிய வழிகாட்டு நெறிமுறைகள் வகுக்கப்பட்டது டன், 28 இணைப்புக் கல்லூரிகளில் (தனியார்) கல்விக் கட்டணம் உள்ளிட்ட கட்டணங்களை நிர்ணயம் செய்திட சென்னை உயர்நீதி மன்ற மேனாள் நீதியரசர் ஆர்.பொங்கியப்பன் தலைமையில் ஒரு குழுவும், இணைப்புக்கல்லூரிகளில் (தனியார்) இளங்கலை வேளாண் பட்டப்படிப்பில் மாணவர் சேர்க்கை நடைபெறுவதை கண்காணித்திட சென்னை உயர்நீதிமன்ற மேனாள் நீதியரசர் என்.கிருபாகரன் தலைமையில் ஒரு குழுவும் அமைக்கப்பட்டு உரிய அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன .

இது தவிர, தமிழ்நாட்டில் இளங்கலை வேளாண் கல்வியில் மாணவர் சேர்க்கையினை அதிகரித்திடவும், வேளாண் கல்வி பயிலும் மாணவர்களின் நலன் கருதியும், அரசு பள்ளியில் பயின்று 7.5 சதவீத இட ஒதுக்கீட்டில் சேரும் மாணவர்களுக்கு கல்விக்கட்டணம் மற்றும் விடுதி, உணவுக் கட்டணத்தில் முழுவிலக்கு வழங்கப்படுவதுடன், முதல் தலைமுறை பட்டதாரிகள், ஆதி திராவிடர், பழங்குடியினர், பிற்படுத்த ப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் ஆகியோருக்கு உதவித்தொகையும், புதுமைப்பெண் மற்றும் தவப்புதல்வன் திட்டங்களில் தகுதிவாய்ந்த மாணவர்களுக்கு உதவித்தொகையும் தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டு வருகிறது .

இவ்வாறு அமைச்சர் எம். ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவித்தார்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர், வ.தட்சிணா மூர்த்தி, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் பெ.குமாரவேல் பாண்டியன் மற்றும் தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணை வேந்தர் (பொறுப்பு) முனைவர் ஆர். தமிழ்வேந்தன், முதல்வர் (வேளாண்மை) முனைவர். என்.வெங்கடேச பழனிச்சாமி மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



திருச்சியில் கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சருமான கே.என்.நேரு வருகின்ற 2026 சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு திருச்சி மத்திய மாவட்ட தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணியின் சார்பில் தில்லை நகர் சாஸ்திரி சாலையில் WAR ROOMயை திறந்து வைத்தார். இந்த நிகழ்வில் மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, மாநகரச் செயலாளர் மேயர் அன்பழகன், துரைராஜ், விஜய்,இளங்கோ த.ஏ.கே.அருண் சூர்யா, திலீபன், த.கோவிந்தசாமி, வினோத்குமார், சக்திவேல், ராஜேந்திரன், மீனா, திலகவதி உள்ளிட்ட தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### அரியலூர் நகரத்தில்

# ஆலந்துறையார் கோதண்டராமசாமி திருக்கோயில் தேரோட்டம்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்!

அரியலூர், அக். 8 -

அரியலூர் மாவட்டம் அரியலூர் நகரில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவிற்கிணங்க, ஆலந்துறையார் கோதண்டராமசாமி திருக்கோயில் இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயிலில் புதிய திருத்தேர் திருப்பணியானது துவங்கப்பட்டது.

திருத்தேரோட்ட விழாவானது நேற்று முன்தினம் நடைபெற்றது. இத்திருத்தேரோட்ட விழாவில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கலந்துகொண்டு திருத்தேரினை பக்தகோடிகளுடன் வடம் பிடித்து இழுத்து துவக்கி வைத்தார்.

இவ்விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா, அரியலூர் நகராட்சி தலைவர் சாந்தி கலைவாணன், நகராட்சி துணைத் தலைவர் கலியமூர்த்தி, மாவட்ட துணை செயலாளர் சி.சந்திரசேகரன், நகர கழகச் செயலாளர் இரா.முருகேசன், பொதுக்குழு உறுப்பினர் இரா.பாலு, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயி கதிரவன், அரியலூர் வருவாய் கோட்டாட்சியர் பிரேமி, வட்டாட்சியர் (அரியலூர்) முத்து லெட்சுமி, கழக நிர்வாகிகள் இராஜேந்திரன், குணா, குமார், மாலா தமிழரசன், சண்முகம் மற்றும் அரசு அலுவலர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.


### கதிர் ஆனந்த் எம்.பி. தொடங்கி வைக்கிறார்!

# கேரள மாநில உள்ளாட்சித் தேர்தல் பரப்புரை!

## கேரள மாநில தி.மு.க. அமைப்பாளர் கே.ஆர்.முருகேசன் அறிக்கை!

திருவனந்தபுரம், அக்.8-

கேரள மாநில தி.மு.க. அமைப்பாளர் கே.ஆர். முருகேசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



நடைபெற இருக்கும் கேரள மாநில உள்ளாட்சித் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் போட்டியிட தலைமைக் கழகத்தில் அனுமதி கோரப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக கேரள மாநிலம் முழுவதும் கழகத்திற்கு வெற்றி வாய்ப்பு உள்ள இடங்களில் போட்டியிட தயாராகி வருகிறது.

கொல்லம் மாவட்டம் புனலூர் நகரசபை திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வெற்றி வாய்ப்பு உள்ள நகரசபையாக கண்டறியப்பட்டுள்ளது. வரும் 11.10.2025 சனிக்கிழமை காலை புனலூர் நகரில் உள்ள 36 நகரசபை வார்டுகளில் 100 க்கும் மேற்பட்ட ஆட்டோ, கார் போன்ற வாகனங்களில் வாகன அணிவகுப்பு ஊர்வலம் நடைபெறுகிறது.

இந்த ஊர்வலத்தை கொல்லம் மாவட்டக் கழக செயலாளர் ரெஜிராஜ் தலைமையில் ஏ.கே. நவாஸ், அஜ்மல் பின ஜமால், ராமர் சீனிவாசன், ஷாஜி வாலக்கோடு ஆகியோர் முன்னிலையில் தென்காசி முன்னாள் மாவட்ட கழக செயலாளர் சிவ.பத்மநாதன் தொடங்கி வைக்கிறார்.

இந்த ஊர்வலம் புனலூர் நகரில் உள்ள 36 வார்டுகளில் பயணித்து மாலை 4 மணியளவில் புனலூர் டவுனில் உள்ள டி.பி. ஜங்ஷன் வந்தடைகிறது. பின்னர் டி.பி.ஜங்சன் ஷாலினி திடலில் கேரள மாநில திமுக அமைப்பாளர் கே.ஆர்.முருகேசன் (எனது) தலைமையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் அமைப்பு சாரா ஓட்டுநர் அணி மாநில அமைப்பாளர், வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் கதிர் ஆனந்த் எம்.பி., அவர்கள் கலந்து கொண்டு கேரள மாநில திமுகவின் உள்ளாட்சித் தேர்தல் பரப்புரையை தொடங்கி வைத்து சிறப்புரை ஆற்றுகிறார்.

இந்த நிகழ்ச்சியில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட கழக பொருளாளர் ஐ.கேட்சன், குழித்துறை நகர்மன்ற தலைவர் பொன்.ஆசைத்தம்பி, ஐ.ஜாண் கிரிஸ்டோபர், ஒருங்கிணைந்த கன்னியாகுமரி மாவட்ட முன்னாள் இளைஞர் அணி அமைப்பாளர் சிற்றாறு ரவிச்சந்திரன், பலுகல் பேரூராட்சி தலைவர் லிஜி விஜின், முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் ததேயூ பிரேம் குமார், பலுகல் பேரூர் செயலாளர் போஸ், முன்னாள் திருவட்டாறு ஒன்றிய கழக செயலாளரும் முன்னாள் தலைமை செயற்குழு உறுப்பினர் ஒய்.ராஜேந்திரன், சிறுபான்மை யினர் நல உரிமைப் பிரிவு அமைப்பாளர் அமானுல்லா, திருவட்டாறு முன்னாள் ஒன்றிய கழக துணை செயலாளர் கலைகிரி, முன்னாள் களியல் பேரூராட்சி மன்றத் துணைத் தலைவர் சிற்றாறு மணோகரன், மாநில இளைஞர் அணி அமைப்பாளர் பிரின்ஸ், மாநில திமுக இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் விபின் முருகேசன், ஹரி குமார், துரை பேச்சிமுத்து, அருள் ஜோதி திருவனந்தபுரம் மாவட்டக் கழக செயலாளர் அனீஷ், புனலூர் ஷாம் லால், ரினுராஜன், ஹரி, பசுலுதீன், பி.கே.பாபு, சதாசிவம் ஆசாரி, அய்யப்பன், அச்சு பிலால், கோபாலகிருஷ்ணன், லால்ஜி, கீதா, ராணி, சுலோச்சனா, ஹேமா, திவ்யா மற்றும் 500க்கும் மேற்பட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொளகின்றனர். இந்த நிகழ்ச்சியில் கொல்லம் மாவட்டக் கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு கே.ஆர்.முருகேசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.




சேலம் ஆவின் நிறுவனத்தின் சார்பில் தீபாவளி பண்டிகை 2025–க்கான இனிப்பு மற்றும் காரவகைகள் விற்பனையினை அமைச்சர் இரா.இராஜேந்திரன் நேற்று முன்தினம் (06.10.2025) மாவட்ட ஆட்சியரகத்தில் தொடங்கி வைத்தார்கள். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, டி.எம்.செல்வகணபதி எம்.பி., மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ரவிக்குமார், ஆவின் பொது மேலாளர் குமரேஸ்வரன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.



பள்ளிக் கல்விதுறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி மணப்பாறை அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை புதிய கட்டிடத்தை ஆய்வு செய்தார். ஆய்வின்போது அங்கு பணியில் இருந்த மருத்துவர்கள் பல்வேறு கோரிக்கைகளை அமைச்சரிடம் வைத்தனர்.இந்நிகழ்வில் அப்துல் சமத் எம்.எல்.ஏ., நகரச் செயலாளர் மு.ம.செல்வம், மருத்துவர்கள் ஜி.சி.கோபிநாத், பி.எஸ்.தமிழ்மணி மற்றும் அரசு உயர் அதிகாரிகள் பங்கேற்றனர்.